பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

30 04 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக்கூட்டம் தற்போது தில்லியில் நடைபெற்று வருகிறது.

2. பஹல்காம் தாக்குதலை திட்டமிட்டு நடத்தியவர்களை சட்டத்தின் முன்னால் நிற்க வைப்பதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. தேசிய அளவில் மின்னணு பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடத்தில் இருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது

4. ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் சிம்ஹாச்சலம் கோவிலில் சுவர் இடிந்து விழுந்து நேரிட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர்.

5. சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சீனாவின் **Fajing Sun** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக்கூட்டம் தற்போது தில்லியில் நடைபெற்று வருகிறது.

பெஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பிறகு நடைபெறும் முதல் அமைச்சரவைக்கூட்டம் இதுவாகும்.

பெஹல்காம் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்ற சிறப்புக்கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிவந்த நிலையில், அதுபற்றி அமைச்சரவைக்கூட்டத்தில் இன்று பரிசீலிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, பாதுகாப்பு தொடர்பான கேபினட் குழுவின் கூட்டமும் இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

அட்சயதிருதியை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்நாள், மக்களுக்கு வெற்றி, வளம் மற்றும் மகிழ்ச்சியை அளிப்பதுடன், வளர்ச்சியடைந்த இந்தியாவை அடைவதற்கான உறுதிப்பாட்டிற்கு புதிய வலிமையை அளிக்கட்டும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவம் குறித்து ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ், தம்மை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடுருவல் மற்றும் தாக்குதலை திட்டமிட்டு நடத்தியவர்களை சட்டத்தின் முன்னால் நிற்க வைப்பத்தில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக தமது வலைதள பதிவில் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து ஐக்கிய அரபு எமிரேட்டின் துணை பிரதமர் திரு அப்துல்லா பின் சையித் அல் நஹ்யானுடன் தாம் பேசியதாகவும், தீவிரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் திறம்பட எதிர்கொள்வதன் அவசியம் குறித்து அப்பேச்சு அமைந்ததாகவும் திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தேசிய மத்தியஸ்த அமைப்பின் மாநாடு புதுதில்லியில் அடுத்த மாதம் 3-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அடானி ஜெனரல் திரு ஆர் வெங்கடரமணி, நாட்டில் உள்ள மத்தியஸ்த மற்றும் நடுவன் நிறுவனங்கள் சிறப்பான மத்தியஸ்த நடைமுறைகளை மேற்கொள்ளும் வகையில் இம்மாநாடு நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக எமது செய்தியாளரிடம் பேசிய மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணைச்செயலர் திரு அஜய் அரோரா, நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைக்கும் வகையிலும், மத்தியஸ்த செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவதாக கூறினார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

இவர்களில், 3 பேர் தமிழகத்தின் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பாக விசாரணை மேற்கொள்ள சிறப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல் துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இதில் காயமடைந்தோர் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இரங்கலையும், ஆறுதலையும் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் சிம்ஹாச்சலம் கோவிலில் சுவர் இடிந்து விழுந்து நேரிட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர்.

இன்று அதிகாலை கனமழை காரணமாக கூடாரம் இடிந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய மற்றும் ஆந்திர மாநில பேரிடர் மீட்புப்படையினர் அங்கு மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், இதில் காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

வேவ்ஸ் எனப்படும் முதலாவது உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு மாநாடு மும்பையில் நாளை தொடங்குகிறது.

நான்கு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த சுமார் ஐந்தாயிரம் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டிற்கான முன்னேற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

தமிழக மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி சிறப்புத் திட்டத்தினை மாநில அரசு இன்று வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக, சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய, மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா, தேசிய அளவில் மின்னணு பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடத்தில் இருப்பதாக தெரிவித்தார்.

மின்னணுவியல் உற்பத்தி சூழல் அமைப்பை மேலும் மேம்படுத்தும் வகையில், இந்த சிறப்புத்திட்டம் வெளியிடப்பட்டிருப்பதாகவும், இதன்மூலம் தமிழகத்தில் 60 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - டி ஆர் பி ராஜா – 37 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

கணித மேதை ராமானுஜன் குறித்த நூல் இன்று புதுதில்லியில் வெளியிடப்பட்டது.

இந்திய தேசிய காப்பகம் வெளியிட்டுள்ள “ராமானுஜன் - மாபெரும் கணித மேதையின் பயணம்” நூலானது கணித துறைக்கு அவர் அளித்துள்ள பங்களிப்பினை முழுமையாக எடுத்துக்காட்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் விரைவில் எட்டப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், வரி விதிப்பு தொடர்பான இந்தியாவுடனான பேச்சுக்கள் சிறப்பாக அமைந்திருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>>

ஸ்வீடனின் **Upppsala** – நகரில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் ஈடுபட்ட நபரை தேடி வருவதாக அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த நகரில் வசந்த திருவிழா சில தினங்களில் தொடங்க உள்ள நிலையில் இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக அங்கு துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், இதனால் சட்ட விதிமுறைகளை கடுமையாக்க முடிவு செய்துள்ளதாகவும் ஸ்வீடன் அரசு தெரிவித்துள்ளது

<<<<<<>>>>>>

சீனாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சீனாவின் **Fajing Sun** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-2 என்ற செட் கணக்கில், பிலிப்பைன்சின் **Frances** – தாய்லாந்தின் **Pruchya Isaro** இணையை வென்றது.

----------------

**Madrid** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – அமெரிக்காவின் **Ben Shelton** இணை – காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-7, 7-5, 10-7 அமெரிக்காவின் **Nathaniel Lammons - Jackson Withrow** இணையை வென்றது.

-------------------

இத்தாலி சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **'Sichirag Duhan** – அர்ஜென்டினாவின் **'Lautaro Agustin** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------------

துனிஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் தனிஷா காஷ்யப் - ஆஸ்திரியாவின் அரபெல்லா கொல்லர் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-1, 6-3 என்ற செட் கணக்கில், இந்தியாவின் சௌமியா விக் - இத்தாலியின் சோபியா இணையை வென்றது.

----------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி சென்னையில் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>>>